பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

29 06 2024          7 15

சனிக்கிழமை          காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தேசிய தேர்வு முகமை ரத்து செய்த மற்றும் ஒத்திவைத்த தேர்வுகளுக்கான புதிய தேதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

2. நீட் தேர்வு முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாணவர்களுக்கு மத்திய அரசு உறுதியளித்துள்ளது.

3. கள்ளச்சாராயம் காய்ச்சுவோருக்கு கடும் தண்டனை விதிக்கும் வகையில் தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

4. அமர்நாத் புனித யாத்திரை இன்று காலை பலத்த பாதுகாப்புடன் தொடங்கியது.

5. உலகக்கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

---- இனி விரிவான செய்திகள் ----

**<<<<>>>>**

ரத்து செய்யப்பட்ட மற்றும் ஒத்திவைக்கப்பட்ட தேர்வுகளுக்கான புதிய தேதிகளை தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.

இதுகுறித்து தேசிய தேர்வு முகமை நேற்று வெளியிட்டுள்ள ஒரு செய்திக்குறிப்பில், இம்மாதம் 18ஆம் தேதி நடைபெற இருந்த **UGC – NET** தேர்வை கடைசி நேரத்தில் மத்திய கல்வி அமைச்சகத்தின் அறிவுறுத்தலின் பேரில் ரத்து செய்யப்பட்டது.

ரத்து செய்யப்பட்ட இந்தத் தேர்வு ஆகஸ்ட் மாதம் 21 மற்றும் செப்டம்டம்பர் 4ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இளநிலை ஆராய்ச்சி படிப்புகளுக்கான உதவித்தொகை மற்றும் உதவிப்பேராசிரியர்கள் நியமனம் மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளுக்கான சேர்க்கைக்கான தகுதியை நிர்ணயிக்கும் தேர்வாகும்.

**CSIR – UGC NET** ஒருங்கிணைந்த தேர்வு அடுத்த மாதம் 25ஆம் தேதி முதல் 27ஆம் தேதி வரை நடைபெறும் என்று தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.

நான்கு ஆண்டுகள் ஒருங்கிணைந்த ஆசிரியர் கல்வி திட்ட சேர்க்கைக்கான **NCET** எனப்படும் தேசிய பொது நுழைவுத் தேர்வு அடுத்த மாதம் 10ஆம் தேதி நடைபெறும் என்று தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.

மேலும் விவரங்களுக்கு மாணவர்கள் **www.nta.ac.in** என்ற வலைதள முகவரிக்குச் சென்று அறிந்துகொள்ளலாம் என்று தேசிய தேர்வு முகமை கேட்டுக்கொண்டுள்ளது.

அகில இந்திய ஆயுஷ் முதுகலை நுழைவுத் தேர்வு ஏற்கனவே திட்டமிட்டபடி அடுத்த மாதம் 6ஆம் தேதி நடைபெறும் என்றும் அந்த முகமை அறிவித்துள்ளது.

**<<<<>>>>**

தேசிய தேர்வு முகமையில் செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள் தொடர்பாக மாணவர்கள், பெற்றோர் தங்களது கருத்துகளையும், ஆலோசனைகளையும் தெரிவிக்கலாம் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

மாணவர்கள் மற்றும் பெற்றோர் தங்களது கருத்துகளை இதற்காக உருவாக்கப்பட்ட **innovateindia.my.gov.in** என்ற இணையதள முகவரியில் தெரிவிக்கலாம் என்று அரசு கூறியுள்ளது.

தேர்வின் புனிதத் தன்மையை கருத்தில்கொண்டு தேசிய தேர்வு முகமையில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்கள் தொடர்பாக அரசுக்கு ஆலோசனை வழங்க ஏற்கனவே மத்திய அரசு இஸ்ரோ முன்னாள் தலைவர் திரு. கே. ராதாகிருஷ்ணன் தலைமையில் குழு ஒன்றை அமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**<<<<>>>>**

கள்ளச்சாராயம் காய்ச்சுவோர் மற்றும் விற்பனை செய்வோருக்கு கடும் தண்டனை விதிக்கும் வகையில் தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

இதற்கான சட்டத்திருத்த மசோதா சட்டப்பேரவையில் இன்று அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

சட்டப்பேரவையில் நேற்று உள்துறை மானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்தில் பேசிய பாமக சட்டமன்ற குழுத்தலைவர் திரு. ஜி.கே. மணி, கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் அருந்தி 60க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தது தொடர்பாக சில கருத்துகளை தெரிவித்தார்.

அப்போது குறுக்கிட்ட முதலமைச்சர், உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய பொருட்களை காய்ச்சுதல், விற்பனை செய்வது போன்ற குற்றங்களுக்கான தண்டனை போதுமானதாகவும், கடுமையானதாகவும் இல்லை என்பதால் இந்தக் குற்றங்களுக்கு வழங்கப்படும் தண்டனையை கடுமையாக்கவும், இக்குற்றங்களை முற்றிலும் தடுக்கவும் ஏற்கனவே உள்ள சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படும் என்று கூறினார்.

<<<<>>>>

நீட் தேர்வு முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாணவர்களுக்கு மத்திய அரசு உறுதியளித்துள்ளது.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான், இந்த விஷயத்தில் மத்திய அரசு கடுமையாக நடந்துகொள்ளும் என்றும், வருங்காலத்தில் தேர்வுகள் நியாயமாகவும், நேர்மையாகவும் நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்குத் தாம் உறுதியளிப்பதாகவும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நீட் தேர்வு உட்பட எந்தவொரு பிரச்சினைகளையும் விவாதிக்க அரசு தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

மாணவர்களின் நலன் கருதி தேசிய அளவில் நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கு நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை அவர் வலியுறுத்தியுள்ளார்.

தொழிற்கல்வி படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை 12ஆம் வகுப்பு மதிப்பெண்கள் அடிப்படையில் மட்டுமே இருக்க வேண்டுமே தவிர, தனி நுழைவுத் தேர்வு அடிப்படையில் இருக்கக் கூடாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய தேர்வு முறை மாணவர்களுக்கு தேவையற்ற கூடுதல் மன அழுத்தத்தை ஏற்படுத்துவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டுக்கு விலக்கு அளிக்கக் கோரும் சட்டப்பேரவை தீர்மானத்தின் நகல் பிரதமருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், அது குறித்து பிரதமர் விரைந்து முடிவெடுக்க வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

நீட் தேர்வில் இருந்து தமிழகத்திற்கு விலக்கு அளிக்கக் கோரும் கோரிக்கை குறித்து நாடாளுமன்றத்தில் குரல் எழுப்ப வேண்டும் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்திக்கும் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இதே கோரிக்கையை மத்திய அரசிடம் வலியுறுத்துமாறு கேரளா, தெலங்கானா, கர்நாடகா, பஞ்சாப் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஆளும் 8 மாநிலங்களின் முதலமைச்சர்களுக்கும் முதல்வர் கடிதம் எழுதியுள்ளார்.

<<<<>>>>

சுற்றுலா தலங்களான ஊட்டி, கொடைக்கானலுக்கான இ-பாஸ் நடைமுறையை செப்டம்பர் 30ஆம் தேதி வரை நீட்டித்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த நகரங்களுக்கு எத்தனை வாகனங்கள் செல்லலாம் என்பது குறித்து சென்னை ஐ.ஐ.டி. மற்றும் பெங்களூரு ஐ.ஐ.எம். நிறுவனங்கள் ஆய்வு செய்து வருவதாகவும், எனவே இ-பாஸ் நடைமுறையை மேலும் நீட்டிக்கலாம் என்றும் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது ஆஜரான அரசு தலைமை வழக்கறிஞர் கூறினார்.

இதையடுத்து ஊட்டி, கொடைக்கானலுக்கு செல்லும் சுற்றுலாப் பயணிகளுக்கான இ-பாஸ் நடைமுறையை வரும் செப்டம்பர் 30ஆம் தேதி வரை நீட்டித்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

<<<<>>>>

கஷ்மீர் பள்ளத்தாக்கில் உள்ள **Baltal** மற்றும் பஹல்காம் முகாம்களில் இருந்து அமர்நாத் யாத்திரை இன்று அதிகாலை பலத்த பாதுகாப்புடன் தொடங்கியது.

ஷ்ரவண் பூர்ணிமா புனிதத்தலத்தை யாத்ரீகர்கள் தரிசித்தபின் ஆகஸ்ட் மாதம் 19ஆம் தேதி இந்த யாத்திரை நிறைவடையும்

ஜம்மு-கஷ்மீர் அரசு இந்த யாத்ரீகர்கள் பாதுகாப்பாக பயணம் மேற்கொள்ளவும், அவர்களுக்கான அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்துள்ளது.

முன்னதாக நேற்று அமர்நாத் புனித யாத்திரை மேற்கொள்ளும் பக்தர்களை வரவேற்றுப் பேசிய துணைநிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா, இந்த யாத்திரையை வெற்றிபெற தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் யூனியன்பிரதேச நிர்வாகம் செய்துள்ளதாகக் கூறினார்.

<<<<>>>>

தில்லி இந்திராகாந்தி விமான நிலையத்தின் ஒன்றாவது முனயைத்தில் நேற்று மேற்கூரை இடிந்து விழுந்ததால் ரத்து செய்யப்பட்ட விமானங்களுக்கான முழு தொகை பயணிகளுக்கு கிடைக்க சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பயணிகளுக்கு அசௌகரியம் ஏற்படாமல் விமான நிறுவனங்கள் இதில் முடிவெடுக்க வேண்டும் என்று மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு கேட்டுக்கொண்டுள்ளார்.

முன்னதாக அமைச்சர் விமான நிலையத்தில் மேற்கொள்ள வேண்டிய சீரமைப்பு பணிகள் தொடர்பாக உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

<<<<>>>>

இலங்கையில் ஆன்லைன் வாயிலாக நிதி முறைகேட்டில் ஈடுபட்டதாக கூறி 137 இந்தியர்களை அந்நாட்டு காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இவர்கள் முறைகேட்டில் ஈடுபட்டதாக கொழும்புவில் இருந்து வெளியாகும் டெய்லி மிரர் என்ற ஆங்கில நாளேடு கூறியுள்ளது.

கொழும்பு புறநகர்ப் பகுதியிலும் பட்டாரமுல்லா மற்றும் அந்நாட்டின் மேற்கு கடலோர நகரமான **Negombo**-விலும் இவர்கள் கைது செய்யப்பட்டதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை காவல்துறையின் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நடத்திய திடீர் சோதனையில் 188 மொபைல் ஃபோன்கள், 16 லேப்டாப்கள், 60 கணினிகள் பறிமுதல் செய்யப்பட்டதாக காவல்துறையின் செய்தித்தொடர்பாளர் **Nihal Thalduwa** தெரிவித்தார்.

<<<<>>>>

மங்கோலியாவில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஆளும் மங்கோலிய மக்கள் கட்சி மீண்டும் வெற்றி பெற்றுள்ளது.

நேற்று வெளியிடப்பட்ட தேர்தல் முடிவுகளின்படி ஆளும் கட்சி நூலிழையில் பெரும்பான்மையை பெற்றுள்ளது.

எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சி, இந்தத் தேர்தலில் அதிக ஆதாயம் அடைந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மொத்தமுள்ள 126 இடங்களில் ஆளும் மக்கள் கட்சி 68 இடங்களைக் கைப்பற்றியுள்ளதாக அந்நாட்டின் பிரதமர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சி 40 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது.

<<<<>>>>

உலகக்கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

பிரிட்ஜ்டவுனில் இந்தப் போட்டி இன்றிரவு 8 மணிக்கு தொடங்க உள்ளது.

ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இரு அணிகளும் இதுவரை நடைபெற்றுள்ள 26 ஆட்டங்களில் மோதியுள்ளன.

அதில் இந்தியா 14 போட்டிகளிலும், தென்னாப்பிரிக்கா 11 போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளது. ஒரு ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

---------------

ஆசிய விளையாட்டுப் போட்டியில் யோகாவை சேர்க்க வேண்டும் என்று இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் பி.டி. உஷா தெரிவித்துள்ளதை வரவேற்பதாக மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>